**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.149/2025 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.4 |
| பெயர் | செபஸ்தியன் | கிராமம் | |
| தந்தை பெயர் | மைக்கேல் பசுங்கிளி | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.P.Manikandan, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 24.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா தோப்புக்கொல்லை முகாமில் வசித்து வருகிறேன். கடந்த 10.02.2025ம் தேதி காலை 08.30 மணியளவில் டீ குடித்து விட்டு நானும் எனது தம்பி மரியசீலன், அடைக்கன் ஆகிய 3பேரும் இருசக்கர வாகனத்தில் முகாமிற்கு வந்து கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் கிருஷ்டின்ராஜாவும், ராஜேந்திரனும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்கள். எங்கள் இருசக்கர வாகனத்திற்கும் அவர்கள் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்திற்கும் 20 அடி தூரம் இருக்கும். அப்போது பாரத் கேஸ் கம்பெனி அருகே செல்லும் போது எங்களுக்கு பின்னால் வந்த AVM தனியார் பேருந்து எங்களை முந்தி சென்று எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த கிருஷ்டின்ராஜாவின் இருச்சக்கர வாகனத்தின் பின்னால் வேகமாக சென்று மோதியது. அப்போது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த கிருஷ்டின்ராஜா தூக்கி வீசப்பட்டு சற்று தூரத்தில் மண் ரோட்டில் விழுந்தார். ராஜேந்திரன் தூக்கி வீசப்பட்டு தார் ரோட்டில் விழுந்தார். பேருந்து அவர்களை இடித்து விட்டு சற்று 60 அடி தூரம் தள்ளி நின்றது. கிருஷ்டின்ராஜாவை சென்று பார்த்த போது அவருக்கு முதுகின்

தோள்பட்டையில் காயம் இருந்தது. ராஜேந்திரனுக்கு மண்டையின் பின்புறம் அடிபட்டு இரத்தம் வந்தது. இருவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி விபத்தில் காயம்பட்ட ராஜேந்திரன் இறந்து போய்விட்டார். சம்பவ சமயத்தில்விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் தப்பி ஓடிவிட்டார். அதனால் அவரை நான் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாகனம் மோதிய சத்தம் கேட்டுத்தான் நான் ஓடிச்சென்று பார்த்தேன். 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆம்புலன்ஸ் வாகனத்தில் இரண்டு பேரையும் கூட்டிச்சென்றார்கள். மேற்படி அவர்களுடன் அடைக்கலம் என்பவர் சென்றார். கிருஷ்டினன்ராஜா எனக்கு உறவினர் என்று சொன்னால் சரிதான். காயம்பட்ட ராஜேந்திரன் எனக்கு நண்பர் ஆவார். விபத்து சம்பவம் நடைபெற்ற இடத்தில் பஸ் நிறுத்தம் எதுவுமில்லை. விபத்து சமயத்தில் ரோட்டில் சென்டர் மீடியன் இருந்ததா என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆலங்குடி - புதுக்கோட்டை ரோடு அதிக வாகனங்கள் சென்று வரக்கூடிய ரோடு என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனத்தை கிருஷ்டின்ராஜா தான் ஓட்டிச்சென்றார். ராஜேந்திரன் பின்னால் உட்கார்ந்து சென்றார். என்னை காவல்நிலையம் அழைத்து சென்று விசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

Sd/–செபஸ்தியன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**